செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

இந்து சாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 10.

ஆரம்பம்: விரோதி ஆ (1889) ஆவணி மீ 28உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 356

புத்-அo] யாழ்ப்பாணம்- கீலகஉரு சித்திரைமீ உஅஉ வெள்ளிக்கிழமை (10-5-1968) [இல-ரு

நவீன பரணியில்

நாவலருக்கு இடம் உண்டா?

"திரு அனந்தலிலும் முகமலர்ந்து வரும்
தேரிவையீர் கடைகள் திறமினோ"

"களப வண்டலிடு கனக கோங்கைமிசை
நிலவெழுந்து கனல் சொரியு மென்று
அளக பந்திமிசை அளிகள் பந்தரிடும்
அரிவையீர் கடைகள் திறமினோ,"

இந்த இரு கவித்துவம் கனிந்த கனிகள், கலிங்கத்துப் பரணியென்னுங் கற்பகதருவிலே, கடைதிறப்பு என்னும பூக்கள் குலுங்குங் கொம்பரிலே, பழுத்துக் கனிந்து தொங்குபவைகள்; இனிக் கனிதற்கு இடமில்லாதவைகள்.

'கடைதிறப்பு' பரணிப்பிரபந்தம் என்கின்ற கோயிலின் முதற் கடைவாய்தல்.

தீண்டத்தகாத நிலையில், தங்காதலிகளால் ஊடித் தாழ்த்தப்பட்ட தலைவர்கள், தம்மைத் தாழுந்தலைவியர்களைத் தாம் தாழ்ந்து, கடைதிறப்புப் பாடுகின்றார்கள். பாடப் பாடக் கடைதிறப்புக் கடுர நிலை எய்துகின்றது.

x x x

'பிராமணத்துவம்' 'குருத்துவம்' வேதாகமாதிசாதரங்களிற் பேசப்பட்டவை. 'பிராமணத்துவம்' தன்பாலில்லை என்று மனச்சான்று பகரவும், அதனைக் கொலைசெய்து, தன்னைப் பிராமணன் என்று பகர்பவனும்,

'குருத்துவம்' தன்பாலில்லை யென்று தன் அறிவு சொல்லவும், அவ்வறிவைக் கொலைசெய்து, தன்னைக் குரு என்று கூறிக் 'குருத்துவம்' செய்வோனும்,

அதிபாதகர்கள் என்கிறது சிவதருமோத்தரம் என்கின்ற உபாகமம்.

பாதகங்களுள் தலையாயது அதிபாதகம். அதிற்றுழ்ந்தது அதிபாதக துல்லியம். [துல்லியம—ஒத்தது.] அதிற்றுழ்ந்தது மகாபாதகம் அதிற்றுழ்ந்தது மகாபாதக துல்லியம், அதிற்றுழ்ந்தது உபபாதகம். அதிற்றுழ்ந்தது, அஃதாவது ஆறும்படியில் உள்ளது உபபாதக துல்லியம். உபபாதக துல்லியர்கள்தாம், மற்சமாமிசம் புசிப்பவர்கள்.

அதிபாதகம் நாவலந்தீவின் மத்தியிலுள்ள மகா மேரு வினும் பெரியது. உபபாதக துல்லியம மாவிட்டபுரத்துக்கு அண்மையிலுள்ள கீரிமலையினுஞ் சிறியது.

அதிபாதகனின்பிள்ளை மரக்கட்டையாயிருக்கும். உபபாதகனின் பிள்ளை பிரதம மந்திரியாயிருக்கும்.

'தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்'

x x x

மின்சாரம் க்ஷேமித்து வைக்கும் இடங்களில், 'அபாயம்' என்ற வார்த்தை பொறிக்கப்பட்டிருக்கிறது

மந்திரங்களினாலே திருவருள் சாந்நித்தியமாகுந் தலங்களிலே, உரிய ஆசாரமின்றிப் பிரவேசித்தல், 'அபாயத்திலும் அபாயம்' என்கின்றார் தத்துவப் பெரியார் ஒருவர்.

அப்பெரியார் மேலுங் கூறுவதாவது:-

"கோயிலின் இரகசியத்தை வேதாகமமாதி சாத்திரங்களில் தெரியுணர்ந்த பிராமணன் ஒருவன், தன்னிடம் உரிய

தொடர்ச்சி 2-ம் பக்கம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
எந்தமதுச்க்தைபிரியாதபெருமா
னெனவிறைஞ்சியிமையோர்
வந்துதிசெய்யவளர் தூபமொடு
தீபமலிவாய்மையதனால்
அந்தியமர்சந்திபல வர்ச்சனைகள்
செய்யவமர்கின்ற வழகன்
சந்தமலிகுந்தளநன் மாதினொடு
மேவுபதி சண்பை நகரே
திருச்சிற்றம்பலம்
—திருஞானசம்பந்த சுவாமிகள்

நாவலர் நல்வாக்கு

உள்ளது போதும் எனாது
அமைந்த மனமே குறைவ
அற்ற களஞ்சியம்.

சமயச்சொற்பொழிவு

சித்திரை மீ 28-ஆம் உ (10-5-68) வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டக் கந்தசுவாமி கோயிலின்வருடாந்தஉற்சவத்தின் எட்டாம்நாள்விழாவையொட்டி பகல் விஷேஷ அபிஷேக ஆராதனையும் திருவீதியுலாவும் இடம் பெற்று இரவு 8-00 மணியளவில் பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் அவர்களால் "ஆறுபடைவீடு" என்னும் அருட்பொருள்பற்றி ஓர் உபந்நியாசமும் இடம்பெறும். பின்பு சுவாமி பெரிய சப்பரத்தில் திருவீதி உலா வருதல் நடைபெறும் மறுநாளாகிய சித்திரைமீ 29உ இரதோற்சவம் சிறப்புற நடைபெறும். ஷ்ஆலயம்தற்காலத்திலுள்ள கோவில்களுக்கு ஒரு முன்மாதிரியாய்த் திகழ்வதுடன் வேத சிவாகம முறைப்படி பூசை ஆராதனைகள், விழாக்கள் என்பனவும் நடைபெறுமொன்றாகும். (ந. நி)

நீர்வேலிக் கந்தன் தேர்த் திருவிழா

நீர்வேலிக் கந்தசுவாமிகோயிலின் வருடந்த உற்சவத்தின் தேர் தீர்த்தத் திருவிழாக்கள் சித்திரை 29,30 (11,12-5-68) ஆகிய தினங்களில் சிறப்புற நிகழும். திருவிழாக்காலத்தில் 'உள்வையூர் சஞ்சீவி' 'அருட்கவி' சீ விநாசித்தம்பியவர்களால் "கருணைக் கந்தன்" என்னும் பொருள் பற்றி தினமும் தொடர்ந்து சங்கீத கதாகாலக்ஷேபம் நிகழ்த்தப் பெற்று வருகிறது. ஏராளமான அடியார்கள் இங்கு நிகழும் அருள் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கின்றனர் (ந நி)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஆதரவில் கீலக ஆண்டு சித்திரைத் திங்கள் 5-ம் நாள் (17-4-68) நிகழ்ந்த சைவமாநாட்டில் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள் (தேவகோட்டை) நிகழ்த்திய

தலைமையுரை

(முன் வளாச்சி — 4)

"சிவ" என்னும் சொல், "வசிகரித்தல்" என்னும் பொருளை யுடையதாய், எழுத்து நிலைமாற்றம் பெற்று விளங்குவது. இதிலுள்ள சிகர வகரங்கள், பதியையும், அருளையும் உணர்த்துவனவாகும். அருளே, சிவபெருமானது சத்தி, சிவசத்தி, கதிரவனில் ஒளிபோன்றது, கதிரவனும், ஒளியும் தம்முள் வேறல்லவாயினும், குணகுணித் தன்மையால், வேறுவைத்தெண்ணப்படும். அது போலவே, சிவமும், சத்தியும் தம்முள் வேறல்லவாயினும், குணகுணித் தன்மையால் வேறுவைத் தெண்ணப்பட்டு, இரு பொருளெனப்படும், "மாறுப், பரையெனுங் கிரணஞ் சூழ்ந்தபாறுவே" என்பது தாயுமான அடிகள் திருவாக்கு.

'சிவம்' என்பது, அன்பு, இன்பம், ஆனந்தம் முதலிய பொருள்களையுடையது. மெய்யடியார்களிடத்து அன்பு செய்து, இன்பங் கொடுத்து, ஆனந்தத்திலழுத்துவது அதன் இயல்பு. "இன்பமே என்னுடை அன்பே" எனவும், "அருணிதி தரவரும் ஆனந்தமலையே" எனவும் வரும் மணிவாசகம் இதனை உணர்த்தும்.

சிவம், தடத்த நிலையில் பதியாக வரும்பொழுது, சிவசத்தியோடு கூடிப் படைப்பு முதலிய ஐந்தொழில்களால், மலசகிதர்களான பசுக்களை ஆளுபவராக இருப்பார். "இறைவனு வான் ஞான மெல்லா மெல்லா, முதன்மையனுக் கிரகமெல்லாம் இயல்புடையான்" என்று, பதிப்பொருளைச் சிவஞான சித்தியார் உணர்த்துகின்றது. 'பதி' என்னும் சொல் "ஆள்பவர்" என்னும் பொருளையுடையது. "ஆளும் நாயகன் கயிலையின் இருக்கை" என்னும் திருத்தொண்டர் புராணம், சிவமே பதி என்பதை விளக்குவதாகும்.

சிவமாகிய பதி, உயிர்களிடத்துக் கலந்து நிற்றலில் உடம்பும், உயிரும்போல ஒன்றாகவும், பொருள் தன்மையில் கண்ணையும், கதிரவனையும் போல வேறாகவும், உயிர்க்கு உயிராதல் தன்மையில் கண்ணொளியும், ஆன்மபோதமும் போல உடனாகவும் இருந்தருளுவார். எண்ணில்லாத உயிர்கள், அவையவை செய்த இருவினைகளுக்கேற்பப், படைத்தலாதிய தொழில்களின் பாற்பட்டுச் செல்லுங்கால், அத்தொழில்களைச் செய்கின்ற பதிரூபம், சத்திரூபங்களாகவும், அவற்றிற்கு வேறாகவும் அவர் இருப்பார்.

ஆன்மாக்களின் உய்தியில் திருவுளம் வைத்து, அவர் செய்யும் ஐந்தொழில்களுள், முன்னிய நான்கும், அவற்றுள் இறுதித் தொழிலாகிய அநுக்கிரகத்தின் பாற்பட்டனவே.

அழிப்பினைப் பாற்றல் ஆக்கம் அவ்வவர் கன்மஒப்பில்
கழித்திடல் நுகரச் செய்தல் காப்பது கன்மஒப்பில்
தெழித்திடல் மலங்கள் எல்லாம் மறைப்பருட் செய்திதானும்
பழிப்பொழி பந்தம்வீடு பார்த்திடின் அருளே எல்லாம்.

என்ற சிவஞான சித்தியார், ஐந்தொழில்களும் அருளின் பாற்பட்டிருக்கும் முறையை அறிவிக்கின்றது.

ஆன்மா—பசு

ஆன்மா, எக்காரணம் பற்றியும் அசித்துப் பொருளாதலில்லாததும், வியாபகமுடையதும், அதிருக்கும் சித்துமான சிவம் ஆதலின்றிச், சார்ந்த பொருள்களினிடத்து, அவையவையாய் வகிப்புண்டு வியாபித்திருக்கும் ஏகதேச வியாபியாய், அநாதியே ஆணவ மலத்தில் மறைப்புண்டு தடைபட்ட இச்சை, ஞானம், கிரியைகளையுடைதாய்ப், பசுவெனப்படும் தூல சித்தாதலையுடையது.

ஆணவ மலத்துடன் கூடிக் கேவலப்பட்டுநின்ற ஆன்மா, அசுத்த மாயையில் அநந்த தேவரால் வழங்கப்பெற்ற காரண சரீரத்தைப் பொருந்தி, அறிவிச்சை செயல்கள் பொது வகையாற் சிறிது விளங்க இருக்கும், பின்னர், மாயா தத்துவத்திலிருந்து தோன்றிய கலை முதலியவற்றால், கஞ்சுக சரீர முதலியவற்றைப் பொருந்தி, சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம் துரியாதீதமாகிய அவத்தைகளை யுற்றுப், போக்குவரவு செய்து, நல்வினை தீவினைகளை ஈட்டியும் நுகர்ந்தும் உழலும்.

இங்ஙனம் வினைப்பயன்களை நுகர்ந்து, துன்புறும் ஆன்மாவுக்கு இருவினையொப்பு நிகழும்போது, அதன் ஆணவமலம் பரிபாகத்தையடையும். அவ்வேளையில், சிவசத்தியின் பதிவு அவ்வான்மாவுக்கு உண்டாக, அதன்வாயிலாக அது, சிவப்பேற்றை அடைந்து ஒன்றியிருக்கும்.

ஒருபொருள் மற்றொரு பொருளைச் சார்ந்து, அப்பொருளேயாக ஒன்றி நிற்பதானால், சாரப்படும் பொருள்களின் தன்மைகளிற் சிறப்பான சில, சாரும் பொருள்களுக்கு அமைதல் வேண்டும். இது குறித்தே சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கயிலைக்குச்

(தொடர்ச்சி 2 ஆம் பக்கம்)

எங்கள் அறிவித்தல்

எதிரேவரும் (12-5-68) ஞாயிற்றுக்கிழமை சித்திராபூரணைத் திருநாளை முன்னிட்டு எமது காரியாலயத்தின் கருமமாறுபாடுகளுக்கு விடுமுறையாதலால் அன்று இதுகு காரியாலயம் சமபந்தமான கருமங்கள் நிகழா எனிபதை அன்பர்களுக்குத் தெரிவிக்கின்றோம்

— அதிபர்

இந்துசாதனம்

தமிழ்ச் சஞ்சிகை

வாழுக அந்தணர் வானவரானமை வீழ்தண்புலத்தவர் வேதமொடு ஓங்க
ஆழுக தீவதெல் லாமர னாமமே சூழ்க வையகமும் துயர் தீர்கவே

திருச்சிற்றம்பலம்

லோகஸு சித்திரைமீ உ௮-உ வெள்ளிக்கிழமை 11968

ஆலயங்களும் சமயக்கல்வியும்

"ஆலயம் என்பது ஆன்மா லயப்படும் இடமாகும். ஆன்மா இறைவனுடன் ஒன்றுபடுமிடம். மக்கள் பதியின் இலக்கணத்தையும் பசுவின் இலக்கணத்தையும் பதியைப் பசு அறியா திருக்கச்செய்யும் பாசத்தின் இலக்கணத்தையும் உணர்தல் வேண்டும். அவ்வித வுணர்ச்சியைப் பெற்றவர்கள்தான் ஆலயவழிபாட்டை முறையாகப் புரிவார்கள் அவ்வுணர்ச்சியைப் பெறுவதற்குச் சமயக் கல்வி யின்றியமையாததாகும் சமயக் கல்வியை மக்களுக்கு ஊட்டுவதற்கு ஆலயம் சிறந்த இடமாகும். ஆலயங்களில் நடத்தப்படும் கூட்டுப் பிரார்த்தனைகளில் சமய போதனை புரிந்து கொள்ளலாம். ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலருடைய முதலாம் இரண்டாம் சைவவினாவிடைகள் பாலபாடங்கள் பெரியபுராண வசனம் திருவிளையாடற் புராண வசனம் கந்தபுராண வசனம் போன்ற நூல்களைப் பாடப புத்தகங்களாக வைத்துக் கொள்ளலாம் அந்நூல்களின் பிரதிகளை மக்கள் பெற்றுக் கற்றுக்கொள்ள முடியாத வேளைகளில் அவற்றிலுள்ள கருத்துக்களைப் பகுதி பகுதியாகக் கற்றறிந்தவர்கள் மக்களுக்கு உபதேசஞ் செய்யலாம். இவ்விதமான சமய போதனையினால் மக்கள் சைவ சமய அறிவினை ஆலயமூல பெறுவார்கள். அக்கல்வியைச் சாதனையில் கொண்டு வருவதற்கு ஆலயம் பெரும் உதவியாகவுமிருக்கும்" என்ற கருத்துக்களை சிவஸ்ரீ சற்புருஷ தேசிகர் அவர்கள் 3-5-68 வெள்ளிக்கிழமை ஸ்ரீவெட்டி வேலன் பிள்ளையார் கோயிலில் நடைபெற்ற சமரத்துவம் என்னும் பொருளபற்றி நிகழ்த்திய சொற்பொழிவில் குறிப்பிட்டனர்.

ஒரு ஆலயத்தின் அமைப்பையும் அங்கு நிறுவப்படும் மூர்த்திகளின் இலக்கணங்களையும் கிரியைகளின் தத்துவங்களையும் மக்கள் அறிதல் வேண்டும் அவ்வறிவைப் பெறும் மக்களுடைய உள்ளங்களில் கடவுள் பக்தி அதிகரிக்கும். பக்தி அதிகரிக்க அவர்கள் ஆலயவழிபாட்டிலுல அடையவேண்டிய பயனையும் அடைவார்கள். அவ்வித அறிவைப் பெறாத மக்கள் ஆலயநிருவாகத்தை ஏற்றுக்கொண்டால் அவ்வாலயங்களில் வேத சிவாகம முறை அநுட்டிக்கப்படாம.

மக்களுடைய உள்ளங்களில் பக்தியையும் புலனடக்கத்தையும் ஞானத்தையும் உதயமாகச்செய்யக்கூடிய கிரியைகளும் நிகழ்ச்சிகளுமே இடம்பெறுதல் வேண்டும். வேடிக்கைகளையும் பயனற்ற நிகழ்ச்சிகளையும் ஆலயங்களில் நடைபெறச்செய்தல் வேண்டும் சமய உபாசங்களையும் கேளிக்கைகளையும் ஆலயங்களில் நிகழ்விர்ப்பதற்கு அங்கு ஊட்டப்படும் சமயக் கல்வி பெரும் உதவி புரியும்.

முத்திக்கு வித்து முதல்வன் றன்ஞானமே
பத்திக்கு வித்துப் பணிந்துற்றுப் பற்றலே
சத்திக்கு வித்துச் சிவபரந் தானுதல
சத்திக்கு வித்துத் தனதுப சாந்தமே.

—திருமந்திரம்,

முத்தியை ஒருவன் அடைதற்குப் பதிஞானம் இன்றியமையாதது. தாழ்மையுற் றியானமும் பக்திக்கு வித்தாகும். சிவந்தன்மையைப் பெறுதல் சகல சித்திகளுக்கும் வித்து. உபநிதம் அல்லது மனச்சாந்தி சத்திநிபாத நிலையை உதவும்.

சமரச்சாரம்

சமய நிகழ்ச்சிகள்

திருநெல்வேலி சிவனகோயில் அலங்கார உற்சவ காலங்களாகிய 8-5-68 முதல் 27-5-68 வரை தினமும் இரவு 7 மணி முதல் 8 30 மணிவரை கண்ணன் பிரம ஸ்ரீ. சிவ லை. நித்தியானந்த சர்மா அவர்களால் "கருணைகருணை" என்னும் பொருளை பற்றி புராணபாராயண சமய சொற்பொழிவு செய்யப்படும்

x x x

புன்னாலைக்கட்டுவன் ஆலயக் கடவைச் சிவகுலநாயகர் ஆலயத்தில் 9-5-68 முதல் தொடர்ந்து பத்து நாட்களுக்கு விஷேச அபிஷேக ஆராதனைகள் இடம் பெறும். பிரதிஷ்டையுடன் சுவாமி வீதியுலாவும் விழா நடைபெறும். சித்தமை அத்த நக்ஷத்திரம் ஷடகோவிவன மணவாளக் கோலத்தினமாகும்.

x x x

அகில இலங்கை இந்து மாமன்றம்

ஷடி மன்றத்தினது பதினமூன்றாவதாண்டு நிறைவுவிழா 11-5-68 சனிக்கிழமை காலை 8 மணி கைத்ஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும். மாலை விழா நடைபெறும் திருமுறை வைபவப்பிரசுரங்களை அமைச்சர்கள் தலைமையில் நடைபெறும். அவர் முன்னுரையும் கருத்தரங்கும் முடிந்தபின் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் பிரசுர விழா திருமுறை முத்திச்சமிப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெறும். திருச்சபைகளை அமைச்சர் கலாநிதி கேற்புரை நிகழ்த்தியபின் ஈழநாட்டுப் பெரியார்களுடைய சொற்பொழிவுகள் நிகழும். பின்பு "சமயமுழவு" என்னும் பொருளபற்றி பேராசிரியர் அ. சஞ்ஞானசம்பந்தன் அவர்கள் ஒரு சொற்பொழியாற்றுவார்கள்

"...டிடீர் டிடீர் என்று சோதனை வருமாம்!

பத்தர்: 'கள்ளு விற்பனை நிலையங்களுக்கு 'ரெலிசார்' இனி, திடீர் முறையைவிடு பாகளாம்...! செய்சிவந்திருக்கிறது!

சித்தர்: ஏன்? அங்கும் கட்டுப்பாட்டு விலைத்திட்டம் அடிலுக்கு வருகுதா...? என்ன சங்கதி?

பத்தர்: அப்படியில்லை! பள்ளி மாணவர்களும் வாலிபர்களும் இன்று நடந்துகொண்டு போகும் முறைகள் யாருக்குமேதிருப்தியளிப்பதாயில்லை! முறைகேடுகளைக் கேல்லாம் மூலகாரணனாயிருந்த அரக்கனைக் கைது செய்யவே இந்தத் திடீர்சோதனைத்திட்டம்!

சித்தர்: ஓகோ! மிகமிக மிகமிக மேலானயோசனை. இத் திட்டத்தைக்கொண்டாரும் அதிகாரிகளே! உங்களுக்கு கோடி வணக்கங்கள்!! .....வெல்க! வெல்க!!

"நாயன்மார் — நாதன்"

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சைவமாநாட்டுத் தலைமையுரை

செல்லும்போது அருளிய திருப்பதிகத்தில் "ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான் மலை உத்தமனே" என்றும், மாணிக்கவாசக சுவாமிகள் தில்லையில் அருளிய கண்டபத்தில் "சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட, அந்தமிலா வானந்தம் அணிகொள்தில்லை கண்டேனே" என்றும் குறிப்பாராயினர்.

பசுத்துவம் நீங்கிச் சிவத்துவ விளக்கம் உண்டாதற்குச், சிவனடி ஞானமே வேண்டப் பெறுவது. "சிவனையவன் திருவடி ஞானத்தாற் சேரச் செப்புவது" என்பது சிவஞான சித்தியார். சிவஞானச்தால் சிவனடியைச் சேர்ந்த சீவன் முத்தர்கள் எங்கும் சிவத்தையே காண்பர்.

மலம் — பாசம்
(ஆணவம்)

பாசம், ஆணவம் என்றும், கன்மம் என்றும், மாயை என்றும் மூவகைப்படும். அவற்றுள் ஆணவமலம் உயிர்களை அநாதியே பற்றி நிற்பதனால் மூலமலமென்றும், சகச மலமென்றும் பெயர்களையுடையதாயிருக்கும். அது ஒன்றாய், எண்ணிறந்த உயிர்களிடமும் செல்லும் எண்ணிறந்த சத்திகளையுடையதாய்ச், செம்பிற்களிம்புபோல ஆன்மாக்களை அநாதியேபற்றி விரவி நிற்பதாய், அவற்றின் கேவலாவத்தையில் அறிவு தொழில்களை நிகழ வொட்டாமல் மறைத்துச் சகலாவத்தையில் மோகஞ் செய்தலாதிய கீழ்ச்செலுத்தும் செயலைச் செய்வதாய்ச், சுத்தாவத்தையில் விலகியிருந்து சிவபோகத்தை நுகருதற்குத் துணை செய்வதாயிருக்கும்.

இது, பிடித்தது விடாததாகை, மோகம் மிகுத்துச் சொல்லுகை, கோபம் இடையறுமை, அறியாமை விஞ்சுதல், கொலைத் தொழில் நினைவு விஞ்சுதல், எப்பொழுதும் வருத்தமுறல், யானென்று விஞ்சுதல், மாச்சரியம், விடாநகை என்னும் எட்டுக் குணங்களை யுடையது.

கேவலத்தில் ஆன்மா, ஆணவமொன்றே அத்துவிதமாகக் கலந்து நிற்க இருக்கும், பின்னர்ச் சகலத்தில், மாயையிலிருந்து சிவபெருமான் படைத்துத் தந்த தநு - கரண - புவன - போகங்களுடனும் கூடியிருக்கும் ஆணவமலம், கேவலாவத்தை, சகலாவத்தைகளில் ஆன்மாவுடன் ஒன்றியிருந்தும், சுத்தாவத்தையில் அதனைவிட்டு விலகியிருந்தும் நித்தியப் பொருளாய் நிலவுவதாகும்.

கன்மம்

"கன்மம்" என்பது "செயல்" என்னும் பொருளையுடையது. இது, உயிர்களால் ஒவ்வொரு பிறவியிலும் செய்யப்பட்டுத் தொகுதியாவது. முன்னைப் பிறவிகளிற் செய்த இதம். அகிதம் என்னும் முயற்சிகள் "ஆகாமியம்" எனப்படும். அவை பலனுக்கு வரும்வரை கட்டுப்பட்டு நல்வினை, தீவினை என்னும் இரண்டு வகையாய்ச் "சஞ்சிதம்" எனப்படும். அந்நல்வினை, தீவினைகள் பலனுக்கு வரும்போது, இன்பம், துன்பம் என்னும் இரண்டு வகையாய்ப் "பிராரத்தம்" எனப்படும்.

இங்ஙனம் ஆகாமியத்தால் சஞ்சித பிராரத்தங்களும், பிராரத்தத்தை அநுபவிக்கும் முறையில், மேலும் ஆகாமியமும் உண்டாகுமாயின், முன்னர்ப் பிராரத்தம் உண்டாயிற்று? ஆகாமியம்

(தொடர்ச்சி 3ம் ஆம் பக்கம்)

தோத்திரம்

— "அருட்கவி S. வி." —

ஆதிபரா பரப்பொருளே ஐயா போற்றி
ஆறுமுக கொடைசர வணனே போற்றி
சோதியமே எறிவரும் துரையே போற்றி
சுவைஞ னக கருமபின்சர்க் கரையேபோற்றி
வாதிடுமா சூர்தமை வதைத்தாய் போற்றி
வனவளளி குஞ்சரியின் மணாள போற்றி
நீதவடி வேல பிடித்த முருகா போற்றி
நீர்வேலி கந்தனே போற்றி போற்றி.

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நவீன பரணியில் நாவலருக்கு இடம்?

ஆசாரம் இல்லையென்று கண்டானாயின், கோயில் எல்லையிலிருந்து 400 முழத்தக்கு அப்பாலே ஓடிப் பிழைத்து ஏங்கி நின்று தமபிட்டு, மன்னிப்புக் கேட்பான். அபாயத்தினும் அபாயமான அந்த இடத்தை உரிய ஆசாரமின்றிக் கனவிலேதானும் அணுகவே மாட்டான்" என்பது.

காரியம் இவ்வாறாக, வீடு தெருப்புப்பற்றி எரியும் போது உள்ளே நிற்பவர்களை, ஆரக்கமுடையானுங் காரியந் தெரிந்தவனுமான ஒருவன், வெளிக்கொணர்வதன்றி, வெளியே நிற்கும் ஒன்றுமறியாத ஏதைகளை உள்ளே தள்ளி விடுவானா?

* * * *

ஆறுமுகநாவலர், இல்லைவாழ் தீக்ஷிதர் பரியந்தம் உள்ளே நிற்பவர்களை, அபாயத்தின, மிக்க அபாயத்தினின்றுந் தப்பிப் பிழையுங்கள் என்று கூக்குரலிட்டவர். அப்படிப்பட்டவர், உள்ளே நிற்பவர்களிலும் பார்க்க மிக நல்லவர்களாய் வெளியே நிற்பவர்களை உள்ளே தள்ளி, அபாயத்தினும் அபாயத்திற் சிக்கவைப்பாரா? சிந்தியுங்கள்.

'நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்'

*

இனிப் பரணிக்கு வருவோம்.

நாவலர்,

கதவை அடைப்பாரா? 'சத்தியபாமா கதவைத் திறவாய்' என்று, கடைதிறப்புப் பாடுவாரா?

சேர்ந்து தெளிந்து செப்புமின் நமரங்காள்!

—"யதார்த்தவாதி"

...ல்லைக் கந்தசுவாமிகோவில்சங்காபிஷேக

வைகாசி க0-உ (25-5-68) வியாழக்கிழமை.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சைவ மகாநாட்டுத் தலைமையுரை

உண்டாயிற்றா? என்னும் ஐயம் நிகழும். பிராரத்தம், ஆகாமியத்தின் பலனே யன்றி. வேறில்லை. அதனால், ஆகாமியமே முன்னர் உண்டாயிற்றென்று சொல்ல வேண்டும். ஆகாமியமாகிய இதமகிதத்தைச் செய்வதற்குக் காரணம், விருப்பு வெறுப்புக்களாம். உயிர்களுக்கு அநாதியே உள்ள அவ்விருப்பு வெறுப்புக்களே 'மூலகன்மம்' எனப்பட்டுப், பிறப்பிறப்புக்களில் படுமாறு செய்யும்.

மூலகன்மத்திலிருந்து உண்டாகும் காமியமலம், இன்ப துன்பங்களாகிய காரியத்தாலும் புண்ணிய பாவங்களாகிய காரணத்தாலும் அறியப்பெறுவது. இதுமடிவந்திருத்தல், பொசிப்பற்றுக் கிடக்கை, புண்ணியச் செய்கை, பாவச் செய்கை, தொழில் செய்யாமல் விடுகை, பரநிந்தனை செய்கை, என்னும் ஆறுகுணங்களையுடையது, உயிரை ஆணவமல காரியங்களாகிய மோக முதலியவற்றுடனும், மாயா மல காரியங்களாகிய தநு—கரண—புவன—போகங்களுடனும் கட்டுப் படுத்தி, இன்ப துன்பங்களின் வேறு பாட்டிற் கேற்பப், பலவேறுவகைப் பட்ட உடல்களை இறைவன் ஆணையால் அவைகட்குத் தோற்றுவித்து, இது நடக்கும்.

(மாயை)

மாயை என்பது மா-யா என்னும் ஒரெழுத் தொருமொழிச் சொற்கள் இரண்டு கொண்டதும், "ஒடுக்குவோனால் ஒடுங்குவது; தோற்றுவோனால் தோன்றுவது" என்னும் பொருளையுடையது மாகும். இது மாயேயமாய் விரிந்த நிலையில் "உள்பொருள்" என்றும் மாயையாய் ஒடுங்கிய நிலையில் "இல்பொருள்" என்றும் சொல்லப்பெறுவது.

இது, சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை என மூன்றாய், ஆணவ, மலமொன்றேயுடைய விஞ்ஞான கலர், அதனுடன் கன்ம மலமுமுடைய பிரளயாகலர், அவற்றுடன் மாயா மலமுமுடைய சகலர் ஆகிய மூவகை உயிர்வர்க்கத்தினருக்கும் முறையே தநு-கரண-புவன-போகங்களாயிருக்கும்.

இது பலகலை கற்றும் அறியாமை, களவு செய்கை, கண்டது மறுத்தல், அறிந்தது மறுத்தல், உண்டாயும் ஈயானுகை, பொருளின் மேல் மாச்சரியம், அழுக்கறுமை ஆகிய ஏழுகுணங்களையும் உடையது. அழியாததாயும், அருவமாயும், ஒன்றாயும், உலகத் தோற்றத்திற்கு வித்தாயும், சடமாயும், வியாபகப் பொருளாயும், சிவ வியாபகத்துள் அடங்குதலால் அவருக்கு வைப்புச் சத்தியாயும், தநு-கரண-புவன-போகங்களை விரித்தலால் மலமாயும், மயக்கஞ் செய்வதாயும் இது இருக்கும்,

மாயையிலிருந்து சுக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி, நூலவைகரி ஆகிய சொற் பிரபஞ்சங்களும், நாதம் முதல் பிருதிவி வரையுள்ள பொருட் பிரபஞ்சங்களும் உண்டாயின,

நமது கடமையும் பயனும்

பெறுதற்கரிய மனிதப் பிறவியைப் பெறும்பேறு நமக்கு வாய்த்துவிட்டது. அதிலும் சைவமாம் சமயம் சாரும் ஊழைப் பெற்று விட்டோம். இப் பிறவியைக் கருவியாகக் கொண்டு, இனிப் பிறவாத பெருநிலையை அடைய முற்படல் வேண்டும். நமது ஆறுமுக நாவலர் பெருமான் "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்." என்று தமது இரண்டாம் பாலபாடத்திலேயே அறிவுறுத்தியுள்ளார்கள்.

ஆணவ மலத்தில் ஒன்றிச், சடம்போற் கிடந்த நம்மிடத்து வைத்த பெருங் கருணையால், சிவபெருமான், தநு, கரண, புவன, போகங்களை நமக்கு வழங்கியுள்ளார். இவற்றை அவர் நமக்குத் தந்தது, இன்ப துன்பங்களை நுகரும்படி செய்து, பிராரத்த கன்மத்தை நீக்குதற் பொருட்டும், அவ்வாறு நீக்குதலால், பருவம் வந்தபோது, சிவதீட்சைப்பேறு வாய்க்க, அதனால் சஞ்சித ஒழிப்பு ஆகாமியச் சேர்க்கையின்மை நிகழுதற் பொருட்டுமேயாம். இங்ஙனம் நிகழுவதனால் எல்லாத் தீமைகளுக்கும் காரணமாய், உயிருடன் கலந்து நின்ற ஆணவமலம் அகன்று பேரின்பம் உண்டாகும்.

இவ்வுண்மைகளை உள்ளவாறு உணர்ந்து, நமது ஆன்றோர்களாகிய அருளாசிரியன்மார்கள் உபதேசித்ததும் — சென்றதுமாகிய செந்நெறி கடைப்பிடித்து ஒழுகுதற்குச், சமயம், விசேடம், நிருவாணமாகிய சிவ தீட்சைகளை முறையாகப் பெற்று, ஸ்ரீ பஞ்சாட்சரஜெபம், சிவபூசை, சிவயோக சாதனம் ஆதியவற்றில் தலைப்பட்டு, இவற்றால் எய்தும் பயனாகிய சிவஞானத்தை எய்தி, அயரா அன்பின் அரன் கழலமர்ந்தின்புறும் பேறு, நமக்கு அவன் திருவருளால் அமைவதாக.

முடிவுரை:

மெய்யன்பர்களே!

சைவநெறி யல்லவற்றுக் கில்லையென்று சொல்லப்பெறும், செய்வினை செய்வான், அதன்பயன் சேர்ப்பான் ஆகிய நான்கையும் பற்றி இங்கே ஒருவாறுகச் சிந்தித்தோம்,

"அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
நில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லை யில்லதோர் அடிமைபூண் டேனுக்கே."

என்னும் அப்பரடிகள் திருவாக்கைச் சிந்தித்துச் "செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறுதிரு நீலகண்டம்" என்னும் ஆளுடைய பிள்ளையார் திருவாக்கில் உறுதி கொண்டு, வினை நீக்கமும், திருவருட் பேறும் பெற முயல்வோமாக. ஞான நூல்களைத் தக்கார் வாயிலாகக் கற்றுத் தெளிந்து, அவற்றின் உண்மைகளை அநுபவத்திற் கொண்டு, இன்புறுவீர்களாக! இது பற்றி அமையும் சைவ பரிபாலனம், இங்கும், எங்கும், என்றும் சிறப்புடன் நிகழ்வதாக! மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்!

நல்லூரில் ஆறுமுக நாவலர்கோன் தாடலைக்கொண்
டல்லாருங் கண்டன் அடிபரவ — வல்லார்கள்
பண்புடன்சேர் சைவ பரிபா லனசபையித்
திண்புவியில் வாழ்க சிறந்து.

நலமே தழைக.

அடைவு நகை ஏலவிற்பனவு

அரசாங்க உத்தரவுடன் இல 24, முதலாம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தில் அடைவு பிடிக்கும் கணபதிப்பிரமணியம் அவர்களின் அடைவுகடையில் 1964 ம் ஆண்டு ஆவணி மீ 14-ம் திகதி தொடக்கம் 1966 ம் ஆண்டு மார்கழி மீ 31-ம் திகதிவரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னால் 1968-ம் ஆண்டு வைகாசி மீ 27-ம் திகதி திங்கள் கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் மேலே அடைவு கடையில் இருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

வை. ஏரம்பமூர்த்தி,
Auctioneer, ஏலவிற்பனையாளர்.
காரைநகர், எம். 23 (10-5-5,)
28—4—68

வில்லூன்றி விநாயகராலய மகோற்சவம்

நிகழும் கீலக வருஷம் வைகாசி மாதம் 4—ஆம் திகதி (17 5 68) வெள்ளிக்கிழமை காலை 9-00 மணியளவில் மகா துவஜாரோகணமுடன் மகோற்சவம் நடைபெறும். பகல் உற்சவம்: காலை 8-30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் 9-00 மணிக்கு உற்சவமும் நிகழும். இரவு உற்சவம் மாலை 6-00 மணி. கதாப்பிரசங்கமும் 8-00 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் நடைபெறும் 24-5-68 வெள்ளி மாலை 4-00 மணியளவில் வேட்டைத் திருவிழாவும் 25-5-68 சனிக்கிழமை காலை 8-00 மணியளவில் இரதோற்சவமும் அன்று பகல் 1-00 மணியளவில் பஞ்சமுக விநாயகப்பெருமானுக்கு பஞ்சமுகார்ச்சனையும் நடைபெறும்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்திலே
திருநெல்வேலி
1 அப்பாப்பிள்ளை சுந்தரம்பிள்ளையும் பெண்
2 மங்கயற்காசி — வாதிகள்
இல எம் பி. 7820 எதிராக
யாழ்ப்பாணம் நல்லூர்
1 சண்முகம் கனகரத்தினமும் பெண்
2 இராசதினம் — பிரதிவாதிகள்

யாழ்ப்பாண டிஸ்ரிக் கோட்டு எம் பி 7820-ம் இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக் கட்டளைபடி பின்னால் விரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 23-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை (23 6 1968) முற்பகல் 10 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 1465/- மேலும் ரூபா 1000/- க்கு 18-11-65 தொடக்கம் 7-5-66 வரை 12 வீதவட்டியும் கூடிய தொகைக்கு 7 5 66 தொடக்கம் இறுதிநாள் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 229/-

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப் குடி நல்லூர்க் கோவிலடி ற்று நல்லூர் இறை "இராச புரந்தரன் வளவு" கிலபர 6 குளி 8 1/2 (கில 6 குளி 8 1/2) இதில் வடகிழக்குப் பக்கமாக அறுதி எற்படுத்தப்பட்ட கில. 2 குளி 1½ நீளமி திகில. 4. குளி 7 மரங்களும், வீடு கிணறும் எல்லை கிழக்கு கந்தையா சதாசிவம், வடக்கு கந்தையா கதிரவேலு மேற்கு கந்தையா கதிரவேலுவும் ஒழுக்கையும், தெற்கு ஒழுக்கை. பதிவு D 224 / 251

S இரத்தினசபாபதி, J P
[illegible] கமிஷனரும், விலைமதிப்பாளரும்
[illegible] கில, 5-5-8 எம் 37 10-5-68)

[illegible]

[illegible]

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது

60 ரூபா விதிதமான 500 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை

மாசமொன்றுக்கு 1 ரூபா விதிதமாக 80 மாச காலத்திற்கு [illegible] கட்டப்படவேண்டியது. குறிக்க காலமுடிவில் [illegible]க்கு ரூபா 100 [illegible] கொடுக்கப்படும். பங்கு [illegible] நேரவும் வாங்கலாம்.

[illegible] 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்கு [illegible] விதிக [illegible]டியுடன் சேமிப்புப் பற்றுவரவு [illegible]

தவணை வரையறுக்கப்பட்ட கேமப் பணம்

[illegible] 12 மாசம், 24 மாசம் 36 மாசம் என்னும் [illegible] ஏற்படும்வட்டியும் முறையே 7 விதிக [illegible] 8 [illegible] 9 விதிதமாகக் கொடுக்கப்படும்.

[illegible]

[illegible] வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். [illegible] மாதம் மாதமாகக் கொடுக்கலாம்.

[illegible]ன்னும் வேண்டிய விபரங்களை
எங்கள் காரியாலய [illegible] அறிந்துகொள்ளலாம்.
[illegible] 14 — மனேஜர்.

24 ஆவது ஆண்டு ஆரம்ப விழா

தருமபரம் ஆதீன மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கைலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் ஞான பீடமேறிய 23 ஆண்டுகள் நிறைவு பெற்று சித்திரை தமிழ்த்திங்கள் சதய நட்சத்திரமாகிய சித்திரைமீ 14-ஆம் நாள் 24 ஆவது ஆண்டு ஆரம்ப விழாவும், ஸ்ரீ குருநாதர் குருபூசை விழாவும் சிறப்புடன் நடைபெற்றது. காலையில் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் ஆதீன வேத ஆகம சாத்திர விற்பன்னரான சிவஸ்ரீ எஸ் சுவாமிநாத சிவாசாரியார் தலைமையில் நடத்தி வைக்க மணிகளுக்கு கலசாபிஷேகங்கள் செய்து வைத்தார்.

ஆதீனத்திற்குச் சொந்தமான 27 சிவாலயங்களிலும் தில்லையம்பதி ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கும் அபிஷேக அர்ச்சனை, ஆராதனைகள் நடத்திக்கொண்டுவந்து, குருமணிகளுக்கு பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

குருமணிகள் காலையில் ஸ்ரீ அப்பர் சுவாமிகளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடத்திவைத்து மாலையில் திருமுறைவாணர்களின் திருமுறைப் பாராயணங்களுடன் அப்பர்சுவாமிகளின் வீதியுலாக் காட்சியும் நடைபெற்றது. அறிஞர்கள் பலரின் ஆய்வுரைகளும் நிகழ்ந்தன.

"இந்துசாதனம்" நிருபர்
மா. பாலசுப்பிரமணியன்

சைவப் புலவர் இளஞ்சைவப்புலவர் தேர்வுகள், 1968.

விண்ணப்ப முடிபு திகதி: சித்திரைமுப்பது (12-5-1968) ஞாயிற்றுக்கிழமை.

வருகை தருவார்

தாய்நாட்டுத் தமிழறிஞ பேராசிரியர் அ சு ஞானசம்பந்தன் இன்றைய விமானமூலம் யாழ்ப்பாண வந்து சேர்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது

கோட்டு விற்பனவு

வளவுபரம

இல: M B 8119

K. S. M சுப்பையாவின் உடைமைக்காரர், V. கனகலிங்கம் கைப்பெண் ஞானசவுந்தரி, நல்லூர், யாழ்ப்பாணம் —வழக்கர்

வழக்கு இல: 1563 / T. D. C
யாழ்ப்பாணம்
எதிராக
கந்தர் சேனாப்பிள்ளை, வேலுப்பொக்கடி, கொடிகாமம்
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில் M B 8199-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைபடி, பின்னால் விபரிக்கப்படும் ஓர் காணியை 1968-ம் ஆண்டு ஆடி மாதம் 6-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய் 24.0/- மே 30-5-[illegible] தொடக்கம் 18-10-66 வரைக்கு ரூபாய் 1,500/- க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுதிநாள் வரை [illegible] வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 201-8 சதம். ஏற்பட்ட செலவு ரூபாய் 139/50, வெளியாத்துச் செலவு ரூபாய் 33/[illegible] ஏற்படும் செலவு ரூபாய 28/5

ஆதன விபரம்

1 வடமாகாணம் தென்னாட்சி டிஸ்திரிக் கச்சாய் கிராமசபையற்று கச்சாய் "[illegible]சாடி கேணி அல்லது [illegible]காடு" என்னும் காணி கே. ப. 9. எல்லை கிழக்கு சின்னத்தம்பி செல்லையா கைப்பெ[illegible] நாகசிப்பாலை, வடக்கு குளம் செல்லப்பா பொன்னம்[illegible] தின ஆதனமும் மேற்கு சண்யர்பிள்ளையினும் பங்காளி தெற்கு கணவதிப்பிள்ளை பெ[illegible] பொன்னம்மாவன் ஆதன[illegible] பதவு ல- F 336/181,

2, மேற்படி இறை "[illegible] தோட்டம்" என்னும் [illegible] கே. பர. 21. எல்லை கிழக்[illegible] ஆறுமுகம் சின்னத்தம்பி வடக்[illegible] புதுகேட்டு, மேற்கு [illegible] குட்டி வைரமுத்து தெற்[illegible] வேலன் பெண பொன்னி[illegible] பங்காளரும் ஒழுக்கையும் ப[illegible]

இல: F 336 182.

இ. கனகரெத்தினம்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
நம் 35 2 கொழும்புத் றை வீதி
சுன்டிகுளி, யாழ்ப்பாணம்.
எம். 36 2-5-68) 10-5-68,

பிழை திருத்தம்

அதை இப்படி வாசிக்கவும்

3-5-68 இந்துசாதனத்தில் வெளி வந்த இலக்கம் 42[illegible] கொண்ட பிஸ்கால் விற்பனையி எதிராளிகளில் '20 பேன் இ[illegible] தினுபாள்' என்றிருப்பதை '2[illegible] பேன் இரதினம்பாள்' எ[illegible]றும் '23—27 பதில் எதிரி[illegible]ளாக்கப்பட்டனர்' என்றும் வ[illegible]கதை '23—27 பதில் எதிரி[illegible]ளாகப்பட்டன - எதிரிகள்' எ[illegible]றும் 'பிரசித்த வெந்தியில் வி[illegible]கப்படுமென்ற .....' என்று[illegible] வரசத்தை "பிரசித்த வெந்திசி[illegible] அக்காணிகளுள் நின்று விற்[illegible]படுமென்ற.....' என்றும் திருத்திக்கொள்ளக் கோருகிறோம்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டிலே
கோப்பாய், கோப்பாய் தெற்கு டேவிட் தம்பிரத்தினம் லூதர்
—வழக்காளி
இல. M. B. 5505 எதிராக

சுண்டிக்குளி பண்டியதாற்பு இல: 70/1 சில்வெஸ்றர் இராசேந்திரம் அந்தோனிப்பிள்ளை சைம்பெண் மேரி மாகறற் அந்தோனிப்பிள்ளை தனக்காகவும் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 624-ம் இலக்கத் தத்துவ வழக்கின் காவஞ்சென்ற சில்வெஸ்றர் இராசேந்திரம் அந்தோனிப் பிள்ளையின் ஆதனங்களின் தத்துவகாரியாகவும் தனியுரிமைக்காரியாகவும்
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் MB. 5505-ம் இலக்கவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுகட்டளையின்படி கீழ்க்காணும் இருதுண்டுக் காணிகள் 1968-ம் ஆ ஜூன் மீ 12-ந்உ (12-6-68) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அவ்வக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 841-66 மேலும் ரூபா 8500/-க்கு 21—3—1953 தொடக்கம் 22—6—64 வரை 8 வீத வட்டியும் கூட்டிய தொகைக்கு 22-6-64 தொடக்கம் இறக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 347-90 ஆனால் இதில் கொடுபட்ட தொகை ரூபா 175-கழிபடவேண்டும்.

ஆதன டாப்பு

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறை "அத்தியடியும் அத்தியடிப்புலமும் மறபிரிவுகளும்" வி பர 14 இணறும் பயிர்வகைகளும் கிழக்கெல்லைக் காணியின் வடக்கோரமாக இக்காணிக்குப் போக்குவரவு செய்ய விடப்பட்ட 6 முழ அகலங் கொண்ட வி பர.1 விசாலமுள்ள கைஒழுங்கைப் பாவிப்புருததும் இதில் வடக்குப்பக்கமாக நிந்தமான கி பர(10) பத்தும் புதுகல் வீடும், பழைய வீடும் தலவாசலும், கிணறும், பயிர்வகைகளுந் மேற்கூறப்பட்ட கைஒழுங்கையைப் பாவிக்குமுருத்தும் இதற்கு எல்லைகிழக்கு பிறெடரிக் பிருன்ஸ்லினதனமும் குறித்த கைஒழுங்கை முழுப்பும் வடக்கு ஆறுமுகம் சின்னத்தம்பியினுரிமைக் காறரின் ஆதனம், மேற்கு பிறெடரிக் அந்தோனிப்பிள்ளையின் ஆதனம், தெற்கு பிறெடரிக் பிருன்ஸ்ஸ் யோசேப்பினதனம் இதடங்கலும் இதற்குரியவைகளும் ஆனால் குறித்த கிணற்றில் கிழக்கெல்லைக்காணிக்குரிய பங்கும் வழிப்பாவிப்புரித்தும் வடக்கெல்லைக் காணிக்குரியவங்கும் இக்காணியின் கிழக்குவேலி அருகாகப்போகும் வழிவாய்க்காற் பாவிப்புரித்தும் இன்னும் வடக்கேயிருக்கும் கைஒழுங்கைக்கு குறித்த வேலிக்கருகால் உள்ள பாதையால் போக்குவரவும் உரித்து புறவீகல். பதிவு D. 228/177.

2. மேற்றை "அத்தியடியும், அத்தியடிப் புலமும் புங்கையடிப் புலமும்" வி. பர. 14. இதில் தெற்குப்புறமாக நிந்தமாக வி. பர. 4 நாலும் பயிர்வகைகளும் வடகிழக்கேயிருக்கும் ஒழுங்கையிலிருந்து இக் காணிக்கும் வடக்கெல்லைக் காணிக்கும் போக்குவரவு செய்யும் வி. பர. ஒன்று விலாசங்கொண்ட ஒழுங்கையிலிருந்து வடக்கெல்லைக் காணியின் கிழக்கெல்லை யோரமாக இக்காணிக்கு வரும் மூன்று அடி அகலமுள்ள வழிப் பாதையுரித்தும் வடக்கெல்லைக் காணிக்குளிருந்தும் கிணற்றிலிருந்தும் தண்ணீர்ப்பங்கும் வழிவாய்க்காற் பாவிப்புரித்தும் இதற்கு எல்லை கிழக்கு பிறெடரிக் பிருன்ஸ்ஸ் அந்தோனிப்பிள்ளையின் ஆதனம், வடக்கு எதிர்க்குரிய மேற்கூறிய ஆதனம் ஆதனம், மற்கு சிவயோகி பெண் புவனேஸ்வரிக்கும் தெற்குக்குமுரிய வாதனங்கள், தெற்கு பொன்னம்பலம் பெண் அன்னப்பிள்ளையின் ஆதனம். பதிவு D. 216/219.

S. இரத்தினசபாபதி, J. P.
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
எம் 38 19—5—68

பிறேசன் ரோட்,
கோண்டாவில் 5-5-68.

கோட்டு விற்பனவு விளம்பரம்

காங்கேசன்துறை தையிட்டி காலம் சென்ற இளையதம்பி வல்லிபுரத்தின் தத்துவ வழக்கின்பேரில்
காங்கேசன்துறை தையிட்டி கேசரி ரோட்டு இல 19.
இ. வல்லிபுரம் கைம்பெண் சிவக்கொழுந்து. தத்துவகாரி.
இல. 1460 Testy எதிராக

1. வல்லிபுரம் விஜயகுமார்த்தி
2. வல்லிபுரம் மகன் சிதம்பரேஸ்வரி
3. வல்லிபுரம் கையிலநாதன்
4. வல்லிபுரம் சிவயோகம். 1—4 ம் எதிர்வாதிகள் பராயமற்றவர்கள் இவர்களின் பராமரிப்புக்காரன் தெல்லிப்பழை மன்காமம் வ. இளையதம்பி செல்லப்பர். —எதிர்வாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் 1460 ம் இலக்கத் தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை நாலு துண்டுகளாக 1968-ம் ஆண்டு ஜூன் (ஆனி) மாதம் 16 ம் திகதி (16-6-68) புதன்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் முறையே அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணிகளின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று தையிட்டியிறை "பெரிய கலட்டி அத்தியடியிற் கலட்டி சாளம்பைக் கலட்டி" கிலப் பரப்பு 40. இது உத்தரவு பெற்ற உலாந்தா R. C. லோறன்சுப் பிள்ளையால் 1967-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 9-உ திகதி 605 ம் இலக்கப் படத்தில் கிலப்பரப்பு 39 ம குளி 13. 6 ம் இதில் கிழக்குப் பக்கமாக நிந்தமாக கிலப்பரப்பு 15 குறித்த படத்தில் 3 ம், 4-ம், 6-ம், 7-ம் துண்டுகளாக வுள்ளது.

துண்டுகளின் விபரம்:

1. 3-ம் துண்டு கிலப்பரப்பு (3) ம் எல்லை கிழக்கு 5-ம் துண்டு வடக்கு ஒழுங்கை, மேற்கு 2-ம் துண்டு. தெற்கு 4-ம் துண்டு இதடங்கலும்.

2. 4-ம் துண்டு கிலப் பரப்பு 4 ம் எல்லை கிழக்கு 5-ம் துண்டு, வடக்கு 3-ம் துண்டு மேற்கு 2-ம் துண்டு, தெற்கு 6-ம் துண்டு இதடங்கலும்.

3. 6-ம் துண்டு கிலப் பரப்பு (4) ம் எல்லை கிழக்கு ஆறுமுகம் சுப்பையாவின் ஆதனமும், 5-ம் துண்டும், வடக்கு 4-ம் துண்டு மேற்கு 2-ம், 7-ம் துண்டுகள், தெற்கு முருகன் செல்லையாவின் ஆதனம். இதடங்கலும.

4. 7-ம் துண்டு கிலப்பரப்பு (4 ம் எல்லைகிழக்கு 6-ம் துண்டும், 2-ம் துண்டின் முகப்பும், வடக்கும் மேற்கும் 1-ம் துண்டு, தெற்கு முருகன் செல்லையாவின் ஆதனம் இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Valuer.

நல்லிப்பழை, 5-5-1968
எம். 39, 10-5-68

கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M. B. 6243
சுண்முகம் பொன்னையா சுண்டிக்குளி
கச்சேரி நல்லூர் வீதி யாழ்ப்பாணம்
எதிராக —வழக்காளி

மைகலே நாசறதர் — 72/10 இராசசிங்கம் வீதி— கலாவதி—யாழ்ப்பாணம் காவஞ்சென்ற ஐயன்னதும் செஸ்சிவினதும் ஆதனதிருகு கோட்டால் நியமிக்கப்பட்ட—பிரதிநிதி எதிரி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B 6243- ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணியை 1968 ஆம் ஆண்டு ஆனி மாதம் 15 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:- ரூபா 1880/-ம் 27-6-67 தொடக்கம் 16-1-68 வரையில் ரூபா 1000/-க்கு 12 வீத வட்டியும், அதன்பின் முழுத் தொகைக்கும் இறுபடும் வரையில் முழுத்தொகைக்கும் 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபா 125/-ம் கொமிஷனுக்கொட்டிய முத்திரையின் பெறுமதி ரூபா 6/-ம்

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளி கோவில் பற்று கரைவலையிறை "பேயன்தலை மடையிற் புலம்" பர. நில லாச்சம் 1½ ஆனால் காணி அளவைக்காரன் (M. Aloysius) எம். அலோசியஸ் ஆல் 11-11-46 இல தயாரிக்கப்பட்ட 1237 ஆம் இலக்கங் கொண்ட படத்தின் படி பர: நில லாச்சம் 2—குளி 11 8/3 இதற்கு எல்லை கிழக்கும் தெற்கும் முடிக்காணியுரியகாணிகள் —வடக்கு இராசசிங்கம் வீதி மேற்கு சூசை டர்ணந்தினதும் மனைவி ஆனாச்சியினதும் ஆதனம் இதடங்கலும்

க. செல்லத்துரை,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
"முருகன் இல்லம்"
இணுவில், 4-4-68

கோட்டு விற்பனவு விளம்பரம்

புத்தூர் தெற்கு, புத்தூர், தவசி சின்னவன் —வழக்காளி
இல. M B 3666 எதிராக

1. சுன்னத்தம்பி நடேசன் அல்லது தம்பிராசா 2 சடையர் கதிரவேலுவும் மனைவி நந்தமா சிறுபிட்டி, வடக்கு. சிறுபிட்டி —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் MB3666-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைபடி, பின்னால் விபரிக்கப்படும் 6 துண்டுக்காணிகளை 1968-ம் ஆனி மீ 19-ஆந் (19-6-68) புதன்கிழமை பி-ப 2 மணிதொடக்கம் அந்தந்தக் காணிகளுக்கு நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபாய் 4927/50-ம் 30-9-60 தொடக்கம் 16-11-64 வரைக்கும் ரூபாய் 3000-க்கு 6 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 465/40. இதில் ரூபா 2500/-குடுபட்டது

ஆதனங்களின் விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு புத்தூர் கோவிற்பற்று சிறுபிட்டி இறை "ருபாதலையம்மறுபிரிவு" என்னும் காணி நிப 12 இதில் நி ப 3 தெக்கிழக்குப் பக்கத்தால் இதனால் வீடும் செம்பயிர் வான பயிர்களும்: எல்லை கிழக்கு ரோடு வடக்கு மெரியான் சின்னத்தம்பி மேற்கு வேலனின் உரிமைக்காரர் தெற்கு கதிரவேலு தம்பையா இதில் ½ பங்கு கிணறும் வழியும்

2 மேற்சொல்லியபடி "முருகன் திடல்" என்னும் காணி நி ப 5½ பயிர்வகைகளும் எல்லை கிழக்கு காரத்திகேசு செல்லம்மாவின் ஆதனம் வடக்கு வேலன் சின்னத்தம்பி மேற்கும் தெற்கும் சங்கரபிள்ளை இளையபிள்ளை தெற்கு ஒழுங்கை இதில் பிரிக்கப்பட்டது ½ பங்கு

3. மேற் சொல்லியபடி "சிங்களவன் சீமான் தோட்டமும்" நி ப 3, 5/8 வீடும் பயிர் வகைகளும் எல்லை கிழக்கு கதிரைவேலு சுந்தம்மா வடக்கு இளையதம்பி கனகரெட்டினம் மேக்கு சங்கரபிள்ளை இளையபிள்ளை தெற்கு காசிப்பிள்ளை இராசம்மா இதில் ¼ பங்கில் 3/4 பங்கு.

4. மேற்சொல்லியபடி கிறுபிட்டி "சந்திய வதியை" நி ப 22, 5/8 செம்பயிர் வகைகளும் எல்லை கிழக்கு வேலன் சின்னத்தம்பி வடக்கு இந்த வழக்கின் எதிரி மேற்கு செல்லப்பா தெற்கு பங்காளர் இதில் பிரிக்கப்படாத ½ பங்கு.

5, மேற் சொல்லியபடி புத்தூர் தெற்கு "பெரியபனறிதோட்டம்" என்னும் காணி நி ப 15,1/8 பனைமரங்களும் எல்லை கிழக்கு முத்துச்சாமி கைம்பெண் சின்னப்பிள்ளை வடக்கு ஈட்டுக்காறர் மேற்கு சுவாமிநாதர் கந்தையாவின் உரிமைக்காரர் தெற்கு ஒழுங்கை இதில் ½ பங்கு.

6. மேற் சொல்லியபடி புத்தூர் தெற்கு "வள்ளவன்சீமாவும், தேவருவன் சீமாவும்" என்னும் காணி நி ப 5 5/8 எல்லை கிழக்கு சிற்றம்பலம் சின்னப்பிள்ளை மேற்கு ஒழுங்கை தெற்கு ஐந்தாங்காணியின் எல்லை வடக்கு முதலித்தம்பி இளையதம்பியும் பங்காளரும் இதில் பிரிக்கப்படாத ½ பங்கு.

நம் 55/2, கொழும்புத்துறை வீதி, இ. கனகரத்தினம்.
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
எம 35, 10—5—68)

மலரயனுந் திருமாலுங் காணுமை மதிமயங்கப்
புலி முனியும் பதஞ்சலியுங் கண்டுதொழப் புரிசடையார்
குலவுநடந் தருகதில்லைக் குடதிசைக கோபுரவாயில்
நிலவிய கற்பகக்கன்றி னிறைமலர்த்தா னிணைபோற்றி.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைசீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், பிரம்மஸ்ரீ க. செ பாலசுப்பிரமணியஐயர் புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம் அவர்களால், 10—5—1968 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 8658
K. V வயிரமுத்து கைம்பெண் தங்கமுமா கல்லூர் யாழ்ப்பாணம். வழக்காளி
எதிராக

1. குலசிங்கம் தம்பையா வேல், 14 வகான்வென்ற்ரோடு ஒழுங்கை யாழ்ப்பாணம்
2. வயிரமுத்து இராதினம் 557, 5-ம் யூனற், பாவற்குளம், பூவரசங்குளம். —எதிரானகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிற் கோட்டின் M B 8658-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1968-ம் ஆனி மீ 22-ந் உ சனிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 1015/- 2-12-66 தொடக்கம் 27-5-67 வரைக்கும் ரூபாய் 750/-கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுகும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 263 50 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் தென்மராட்சி டிஸ்திறிக் எழுதுமட்டுவாள் பகுதி மிருசுவில் கோயிற்பற்று "செம்பாடு" நில. பர. 8½ பயிர் வகைகளும் எல்லை கிழக்கு சின்னராயர் கைம்பெண் மேரியோசேபினுக்கும் மறபேருக்கு முரிய ஆதனம், வடக்கு மரியான் கந்தன் பெண் வாலப்பிள்ளையினதனம், மேற்கு ரோடு தெற்கு அந்தோனிப்பிள்ளை பெர்ணாண்டோவினதனம். பதிவு இலக்கம் F 335/218.

இ. சு. தர்மரத்தினம்
கொமிஷனர்.
Commissioner & Valuer.
239, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்
எம. 34, 10 5-68)

கோட்டு விற்பனவு விளம்பரம்

கதுமலை கிழக்கு யாழ்ப்பாணம் சின்னத்தம்பி ஆறுமுகம் மகன் கமலாசனி
வழக்காளி
வழக்கு இல. M. B. 7736
எதிராக
நாயன்மார்கட்டு நல்லூர்
யாழ்ப்பாணம்
1. ஆறுமுகம் சின்னப்பு
வேலுப்பிள்ளையும் பெண்
2. அன்னபூரணம்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 7736-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக்காணியை, 1968-ம் ஜூன் (June ஆனி) மீ 1 உ (1-6-68) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி 9,638-66 -ம் 7-10-65 தொடக்கம் 7-2-67 வரைக்கும் ரூபாய் 7,000 க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுகும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 533-85.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோயிற்பற்று கோப்பாய் தெற்கு இறை கோட்டை வாசல்' பர சில இலா 3 குளி 8. கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் வீடும் தோட்டமும் கிழக்கிலுள்ள கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் இதற்கு எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை பெண் அன்னபூரணத்துக்குரிய ஆதனம், வடக்கு ரோடு, மேற்கு இரெத்தினம் பெண் சொர்ணம்மாவுக்கு முரிய ஆதனம். தெற்கு அப்பாப்பிள்ளை பெண் செல்லம்மாவுக்குரிய ஆதனம்.

நா. ஸ்ரீ இரங்கநாதன்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
22, பெருமாள்கோவில் தெற்கு
ஒழுங்கை, யாழ்ப்பாணம்
6-4-68 எம், 41 10—5—68